www.Padasalai.Net www.TrbTnpsc.com

பள்ளிக் கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

# தேன்சிட்டு

THEN CHITTU ★
FORTNIGHTLY ★

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9
வகுப்புகளுக்கான
மாதமிருமுறை இதழ்

- 16-31 ஜனவரி 2024
- சிட்டு 3 • இதழ் 28
- விலை : ரூ. 10/-
- சென்னை

- 16-31 JANUARY 2024
- Chittu 3 • Issue 23
- Price : Rs. 10/-
- Chennai

## நத்தை எத்தனை ஆண்டுகள் தூங்கும்?




நத்தையின் தூக்கத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள 9ஆம் பக்கம் வாங்க...






கதவு பத்திரம்! 04



அன்னப்பறவை செய்வோம் 10



20 கராத்தே →

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# இந்த இதழ்கள் உங்கள் வீட்டிற்கு வரவேண்டுமா?







## உங்களுக்குப் பிடித்த ஊஞ்சல், தேன்சிட்டு இதழ்கள் உங்கள் வீடுகளுக்கு நேரடியாக வர வேண்டுமா?

இந்த QR-Code ஐ ஸ்கேன் செய்து உடனே சந்தாதாரர் ஆகுங்கள்




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!


# தபால்காரர்


ஓவியம் : பா. செந்தில்குமார்

கையில் கடிதம் எடுத்து வருவார்
காலை மாலை வந்து போவார்
பையைத் தோளில் மாட்டியிருப்பார்
பணமும் நமக்குக் கொண்டு வருவார்
அன்புச் சேதி கொண்டு வருவார்
அச்சச் சேதி கொண்டு வருவார்
இன்பச் சேதி கொண்டு வருவார்
இழவுச் சேதி கொண்டு வருவார்
செய்தித் தாளைக் கொண்டு வருவார்
சிப்பக் கட்டு கொண்டு வருவார்
வெயில் மழையைப் பார்க்க மாட்டார்
வேலை ஒன்றே கண்ணா யிருப்பார்
தொப்பி தலையில் அணிந்து இருப்பார்
முத்திரைப் பட்டை போட்டிருப்பார்
கண்டால் நம்மை வணங்கி நிற்பார்
கண்ணியமாகத் தொண்டு செய்வார்.

– வயலூர் சண்முகம் ('சின்னப் பூவே மெல்லப்பாடு' நூலில் இருந்து)

## உள்ளே...


நகல் எடுக்கும் இயந்திரம்

5

சிற்பி யார்?

8

வட துருவமும் தென் துருவமும்

16

தண்ணீரின் ஓசை

18

ஒரு பாட்டுக்கு ஓர் அணா!

21



தேன்சிட்டு
Then Chittu Fortnightly
- 16-31 ஜனவரி 2024
- சிட்டு 3 ⋆ இதழ் 28
- 16 - 31 January 2024
- Chittu 3 ⋆ Issue 28

பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி

அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்

அச்சகம் :
ராசி கிராபிக்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
69-71/A, சிட்கோ தொழிற்பேட்டை,
திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம்,
பின் கோடு – 600 124.

பதிப்பகம்:
தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்.
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
எண் 68, கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006

படைப்புகள் அனுப்ப : thenchittu@tnschools.gov.in
சந்தா குறித்த தகவல்களுக்கு: magazine.subscription@tnschools.gov.in


Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# கதவு பத்திரம்!

**ஓர் ஊரில் இளைஞன் ஒருவன் இருந்தான். உடலை உறுதியாக வைத்திருந்தான். என்ன வேலை கொடுக்கிறார்களோ, அவர்கள் சொன்னவிதமாக அப்படியே செய்து முடிப்பான். ஆனாலும், தனக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லையே என்று எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு திரிந்தான்.**

அவனின் நண்பன் யோசனை ஒன்று சொன்னான். "நண்பா, நீ நம் நாட்டு அரசரிடமே சென்று வேலை கேட்கலாமே" என்பதுதான் அது.

இளைஞனும் அரண்மனைக்குச் சென்றான். அரசரை வணங்கி வணக்கம் சொன்னான். "மன்னா, என் உறுதியான உடலுக்கு ஏற்ற வேலையை யாருமே தரவில்லை. அதனால், உங்களைத் தேடி வந்துள்ளேன்" என்றான்.

அந்த இளைஞனை நன்கு பார்த்தார் மன்னர். "இளைஞனே, வலிமையான உடலைக் கொண்டுள்ளாய். உன்னை மாதிரியான ஆள்தான் நம் அரண்மனை வாசலைக் காவல் காக்கத் தேவை" என்றார். அதைக் கேட்டதும் இளைஞன் மகிழ்ந்தான்.

"மன்னா, எனது வேலை என்ன என்பதைச் சொல்லுங்கள். சிறப்பாகச் செய்து முடிப்பேன்" என்றான்.

"நம் கோட்டைக் கதவை இரவு முழுவதும் பத்திரமாகக் காவல் காக்க வேண்டும். அதில் ஒரு நிமிடம் கூட சோர்ந்துவிடக் கூடாது. முழுக் கவனம் தேவை. இதுவே உனக்கான வேலை" என்றார் மன்னர்.

"நீங்கள் சொன்னபடியே நான் செய்வேன். இனி, கோட்டைக் கதவு என் பொறுப்பு" என்று உறுதியாகச் சொன்னான். அதைக் கேட்ட மன்னருக்கும் பெரும் நிம்மதி ஏற்பட்டது.

மன்னருக்கு அளித்த வாக்கின்படி இரவு முழுவதும் கண் விழித்துக் கோட்டைக் கதவை காவல் காத்தான். அடுத்த நாள் இரவும் அப்படியே காவல் காத்து வந்தான்.


அப்போது பாட்டுச் சத்தம் கேட்டது. எங்கே இருந்து வருகிறது என்று பார்த்தான். தூரத்தில் தெருக்கூத்து நடந்துகொண்டிருந்தது. மக்கள் கூட்டமாக அமர்ந்து அதை இரசித்துக் கொண்டிருந்தனர்.

இந்த இளைஞனுக்குக் கூத்து என்றால் மிகவும் பிடிக்கும். ஆனால், காவல் பணி இருக்கிறதே... அங்கிருந்து செல்ல முடியாது அல்லவா? அதனால் பாடல்களைக் கேட்டு இரசித்தான்.

ஒரு கட்டத்தில் கூத்து நடக்கும் இடத்துக்கே செல்ல வேண்டும் என்ற ஆசை அவனுக்கு ஏற்பட்டது. கதவைக் காவல் காக்க வேண்டும் என்ற மன்னரின் உத்தரவு வேறு. என்ன செய்வது என்று குழம்பினான்.

உடனே, கதவைக் கழற்றினான். அதைத் தூக்கிக்கொண்டு கூத்து நடக்கும் இடத்துக்கு வந்தான். கதவைக் கீழே போட்டு அதன் மேல் அமர்ந்துகொண்டு கூத்தை இரசித்தான்.

அந்த நேரம் பார்த்து திருடர்கள் கோட்டைக்குள் புகுந்துவிட்டார்கள். அரண்மனையில் உள்ள நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர்.




பொழுது விடிந்துவிட்டது. கூத்தும் முடிந்துவிட்டது. அந்த இளைஞன் கதவை மீண்டும் கோட்டையில் வந்து மாட்டினான். வீட்டுக்குப் புறப்பட்டான். அதற்குள் மன்னர் அனுப்பிய காவலாளிகள் அவனைக் கைது செய்து மன்னர் முன் நிறுத்தினர்.

கோபத்துடன் இருந்தார் மன்னர். "இளைஞனே உன்னால்தான் இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்தது" என்று ஆத்திரமாகச் சொன்னார் மன்னர்.

"இல்லை மன்னா, நீங்கள் உத்தரவு இட்டபடி கோட்டைக் கதவை பத்திரமாகப் பாதுகாத்தேன். இப்போது வேண்டுமானாலும் சென்று பாருங்கள். துளி சேதாரம்கூட இல்லாமல் கோட்டைக் கதவு இருக்கிறது" என்றான் இளைஞன்.

அதைக் கேட்ட மன்னர், 'உடலில் உறுதி இருந்து என்ன, புத்திசாலியாக இல்லாத ஒருவனிடம் பெரிய பொறுப்பைக் கொடுத்து விட்டோமே' என்று நினைத்தார். அந்த நிமிடமே அவனை வேலையை விட்டு அனுப்பினார்.

ஏன் தனக்கு வேலை போனது என்று தெரியாமலேயே வீட்டுக்குச் சென்றான் அந்த இளைஞன்.

**- நாடோடிக் கதை**


Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# நகல் எடுக்கும் இயந்திரம்

**பள்ளி முதல் அலுவலகம் வரை தேவைப்படும் ஒரு முக்கிய கருவிதான் நகல் எடுக்கும் இயந்திரம். பள்ளிச் சான்றிதழ்கள், அடையாள அட்டை, முக்கியமான ஆவணங்கள் என அனைத்தையும் நகல் எடுக்கும் இயந்திரம் வாயிலாக நகல் எடுத்து எளிதாக உபயோகிக்க முடிகிறது. இத்தகைய நகல் எடுக்கும் இயந்திரம் (Photocopy machine) எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பார்ப்போம்.**



நகல் எடுக்கும் இயந்திரம் அசைவற்ற மின் ஆற்றலினால் (Static Electricity) இயங்குகிறது. அசைவற்ற மின் ஆற்றல் நேர்மின் சக்தியையும் (Positive), எதிர்மின் சக்தியையும் (Negative) கொண்டது. இரு மின்சக்திகளும் ஒன்றை ஒன்று ஈர்க்கக்கூடியவையாகும். எதிர்மின் ஆற்றல் ஈர்ப்பதனால் நகல் எடுக்கும் இயந்திரம் செயல்படுகிறது.




- நகல் எடுக்கும் இயந்திரத்தை இயக்கியதும் முதலில் நகல் எடுக்கப்பட வேண்டிய பொருள் அல்லது காகிதத்தின் மீது அலசன் விளக்கு ஒளி பாய்கிறது.
- அவ்வொளி ஒரு லென்ஸ் வழியே ஊடுருவி அருகில் சுழலும் உருளை மீது பாய்கிறது. அசைவற்ற மின்னாற்றலால் இந்த ஒளி நேர்மின் ஆற்றலாக மாறும்.
- அந்தச் சுழலும் உருளைக்கு அருகில் வெள்ளைக் காகிதம் உருளைக்குள் செல்லுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- உருளை மீது பாய்ந்த ஒளி, நகல் எடுக்க வேண்டிய பொருளின் பிம்பத்தை உருவாக்கும். இவ்வொளியானது பிம்பத்தின் கருமையான பகுதிகளில் மட்டுமே பாய்கிறது.
- உருளையில் பதிவான பிம்பத்தின் மீது டோனர் எனப்படும் கறுப்பு நிற பவுடர் தெளிக்கப்படுகிறது. இந்த பவுடர் மீது எதிர்மின் ஆற்றல் இருக்கும்.
- இந்தக் கறுப்பு பவுடர் மீது இருக்கும் எதிர்மின் ஆற்றல், உருளையின் மீதுள்ள நேர்மின் ஆற்றலால் ஈர்க்கப்படுகிறது. மற்ற பகுதிகள் வெள்ளையாகவே இருக்கும்.
- உருளையில் பதிவான பொருளின் பிம்பம், சுழற்சியினால் வெள்ளைத்தாளில் உருவத்தைப் பதிவு செய்கிறது.

**பல்வேறு வகை நகல் எடுக்கும் இயந்திரங்கள்**

**1938 – செஸ்டர் கார்ல்சன் கண்டுபிடித்த நகல் எடுக்கும் இயந்திரம் (Basic Xerography)**

**1950 – இங்க் – ஜெட் பிரிண்டர் (Ink-jet Printer)**

**1969 – லேசர் அச்சு இயந்திரம் (Laser Printer)**

**1991 – டிஜிட்டல் அச்சு இயந்திரம் (Digital Photocopier)**

**டோனர் (Toner) :** டோனர் என்பது, எழுதும் பென்சிலில் உள்ள கிராஃபைட் என்னும் மிருதுவான (கரி) ஒரு பொருள். இந்த டோனர் வெறும் காகிதத்தில் ஒட்டிக் கொள்வதில்லை. மின் ஆற்றலினால் மட்டுமே ஈர்க்கப்படுகிறது.

**ஜெராக்ஸ் :** ஒளிநகலி இயந்திரத்தை ஆங்கிலத்தில் ஜெராக்ஸ் (Xerox) மிஷின் என்று கூறுவது தவறாகும். ஜெராக்ஸ் என்பது அந்த இயந்திரத்தைத் தயாரித்த நிறுவனத்தின் பெயராகும். கிரேக்க மொழியில் ஜெராக்ஸ் என்பதற்கு 'உலர் எழுத்துகள்' (Dry Writing) என்று பொருள்.

– தேவி

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# வினா எழுத்துகள்

வினாவைக் குறிக்கும் எழுத்துகள் வினா எழுத்துகள் ஆகும். எ, யா, ஆ, ஓ, ஏ இவை ஐந்தும் வினா எழுத்துகள். இவற்றில் சில சொல்லுக்கு முதலில் வரும், சில முடிவில் வரும்.

**எவன், யார்** – சொல்லுக்கு முதலில் வருவது.

**அவனா** – **ஆ**, **இவனோ** – ஓ – சொல்லின் இறுதியில் வருவது.



வினா எழுத்துகள் **அகவினா, புறவினா** என இரண்டு வகைப்படும்.

சொல்லுக்கு அகத்தில் இருந்து வினவுவது அகவினா. இதைப் பிரிக்க முடியாது.


உதாரணம்: **எவன்? எது?**

சொல்லுக்குப் புறத்தில் இருந்து வினவுவது புறவினா. இதைப் பிரிக்க முடியும்.

உதாரணம்: **எம்மனிதன் = எ+மனிதன், அதுதானே = அதுதான்+ஏ**

கீழே உள்ள எழுத்துகளில் வினா எழுத்துகளை மட்டும் கண்டுபிடியுங்கள்.

எ அ ஐ க யா இ ஆ ஓ ப ம ஏ த வ



## வார்த்தை விளையாட்டு

கலைந்திருக்கும் எழுத்துகளில் இருந்து சரியான சொற்களைக் கண்டறியுங்கள்.

1. கதம்புத்
2. விடைப்பனமா
3. வாவினல்
4. துவத்குபோரக்
5. திபத்ருசெம்
6. பாசிட்லம்டம்
7. கவிற்கண்ள்
8. கம்ரடிகா



விடைகள் : 22ஆம் பக்கம்


Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# Find the most suitable pairs for the Action Words

## Cut



1
a) The milk
b) The soil
c) The vegetables

## Read



2
a) The book
b) The games
c) The bottle

## Drink



3
a) The food
b) The juice
c) The banana

## Wake



4
a) The baby
b) The flowers
c) The pot

## Push



5
a) The poem
b) The chair
c) The tree

## Lift



6
a) The wall
b) The building
c) The box

## Climb



7
a) The tree
b) The world
c) The water

## Hold



8
a) The bottle
b) The water
c) The air

## Ride



9
a) The fish
b) The frog
c) The horse

## Sing



10
a) A song
b) A speech
c) A dialogue

## Count



11
a) The sand
b) The numbers
c) The milk

Answers:
1. The vegetables
2. The book
3. The juice
4. The baby
5. The chair
6. The box
7. The tree
8. The bottle
9. The horse
10. A song
11. The numbers

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# சிற்பி யார்?

**வெகுகாலத்திற்கு முன் ஒரு சிங்கமும் மனிதனும் நண்பர்களாக இருந்தார்கள்.**

ஒரு நாள், அவர்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே அங்குமிங்குமாக நடந்தார்கள்.

அப்போது மனிதன், "உனக்குத் தெரியுமா சிங்கமே? இந்த உலகிலே வீரத்தில் சிறந்தவன் மனிதன்தான்" என்றான்.

"இல்லை, சிங்கம்தான்! ஒரு மனிதன் வீர தீரனாக இருந்தால், உடனே அவனை என்ன சொல்லுகிறார்கள்? 'சிங்கம்' என்று புகழ்கிறார்கள். அதனால், சிங்கம்தான் வீரத்தில் சிறந்தது" என்றது சிங்கம்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டு வரும்போது வழியில் ஓர் அழகான சிலையைக் கண்டனர்.

அந்தச் சிற்பத்தில், ஒரு சிங்கத்தைக் கீழே போட்டு, அதன் மேல் ஏறி நின்றபடி இருந்தான் ஒரு மனிதன்.

"நம்மில் யார் வீரம் மிக்கவர் என்பது இதோ இந்தச் சிலையைப் பார்த்தாலே தெரியுமே!" என்றான் மனிதன்.

சிங்கம் சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இதைச் செய்த சிற்பி யார்? சிங்கமா? இல்லை; உன்னைப் போல ஒரு மனிதன்! சிற்பக்கலை எங்களுக்குத் தெரிந்திருந்தால், நாங்கள் என்ன செய்திருப்போம்? மனிதனை மடக்கிப் போட்டு, அவன் மார்பில் கால்களை ஊன்றிக்கொண்டு ஒரு சிங்கம் நிற்பது போல் சிலை செய்திருப்போம்" என்றது.

அந்த மனிதன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

- அன்பு



ஓவியம் : பா. செந்தில்குமார்

# Who is the sculptor?

**Long long ago, a lion and a man were friends. One day, they were walking here and there talking about many things. The man said, "Do you know that man only is known for valour". The lion said, "No, no, it is only a lion. If a man is brave, he is praised as 'lion'. So, only lion is known for bravery".**

While walking by discussing this, they saw a beautiful statue. The statue showed a man standing over a lion. The man said, "We can find who is brave by looking at the statue itself". The lion laughed. The man said, "Why are you laughing?" The lion said, "Whom did sculpt this statue? Is it a lion or a man? It must be a man like you. If we had known the art of sculpture, what would we have done? We would have sculpted a statue in which a lion was standing on a man, stamping its legs on him.

The man was deep in the thought.

- Anbu

Translated by Meenakshi D.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மூன்று ஆண்டுகள் தூக்கமா?



நத்தைகள் உயிர் வாழ்வதற்கு ஈரப்பதமான சூழ்நிலை தேவை. இதன் காரணமாக நத்தைகள் இயற்கையாகவே ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் தன்மை உடையவை. எனவே இயற்கையான வாழ்நிலை காரணமாகத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை தூங்கும் பழக்கத்தை நத்தைகள் கொண்டுள்ளன.

## பாம்புகள் உறங்கும்போதும் கண்களை மூடுமா?

பாம்புகளுக்குக் கண் இமைகள் இல்லாத காரணத்தால் தூங்கும் போது அதன் கண்களை மூட முடிவதில்லை. ஆனால் அதன் கண்களைப் பாதுகாப்பதற்காகக் கண் செதில்கள் அமைந்துள்ளன.





## ஆக்டோபஸ்ஸுக்கு மூன்று இதயங்கள் உள்ளன தெரியுமா?

8 கால்களை உடைய கடல்வாழ் உயிரினம் ஆக்டோபஸ். இது பல அதிசயங்களைக் கொண்டது. ஆக்டோபஸ்ஸுக்கு மூன்று இதயங்கள் உள்ளன. ஒரு இதயம் உடல் முழுக்க இரத்தச் சுழற்சி நடைபெற உதவுகிறது. மற்ற இரண்டு இதயங்களும் செதில் பகுதிக்கு இரத்தத்தைச் செலுத்துகின்றன. இதன் வாயிலாகவே ஆக்டோபஸ் ஆக்சிஜன் காற்றைச் சுவாசிக்கிறது.



## வெள்ளிக் கோளில் ஒரு நாள் என்பது எவ்வளவு தெரியுமா?

சூரியக் குடும்பத்தில் உள்ள வெள்ளிக் கோளில் ஒரு நாள் என்பது கிட்டத்தட்ட ஓர் ஆண்டாகும். வெள்ளி தன்னைத் தானே சுற்றிக்கொள்ள சராசரியாக 243 நாட்களை எடுத்துக் கொள்கிறது.




உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.

முகவரி : 'அறிவோம் ஆயிரம்', 'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006. மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# அன்னப்பறவை
















## செய்முறை

1. பேப்பர் கப்பின் பின்பகுதியை, கொடுக்கப்பட்டுள்ளது போல் வெட்டிக் கொள்ளவும்.
2. பேப்பர் கப்பின் விளிம்பை வெட்டிக் கொள்ளவும்.
3. பேப்பர் கப்பை தட்டையாக்கிக் கொள்ள வேண்டும்.
4. படத்தில் கொடுக்கப்பட்டுள்ள அன்னப்பறவையைப் போல வரைந்தெடுக்கவும்.
5. பின்னர் அந்த வடிவத்தை வெட்டிக் கொள்ளவும்.
6. அன்னப்பறவையின் முகத்தை பசையால் ஒட்ட வேண்டும்.
7. உடம்பின் கீழ் பகுதியை, கொடுக்கப்பட்டுள்ளது போல் 2 செ.மீ. அளவில் வெட்டி அதனைத் தலைகீழாக உள்நோக்கி மடக்கிக்கொள்ளவும்
8. கண் மற்றும் மூக்குப் பகுதிகளுக்கு வண்ணம் தீட்டிக்கொள்ளுங்கள்.
9. கோலியை உடம்பின் முன்பகுதியில் வைத்து விடுங்கள்.
10. இப்பொழுது அன்னப்பறவை அழகாக நீந்துவதைப் பாருங்களேன்.

உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

**மாணவர்களே!**
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?



பள்ளிக் கல்வித் துறையின் **மாணவர் உதவி எண்**

நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

**14417**

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## 1. புதிர்

**நவீன், மதன் எங்கேடா போனீங்க? என்னடா பையில?" என்று கேட்டுக்கொண்டு குமார் வந்தான்.**

"நாங்க இருவரும் மாந்தோப்புக்குச் சென்று மாம்பழம் வாங்கி வருகிறோம். நாங்கள் வாங்கிய மாம்பழங்களின் எண்ணிக்கையைப் பெருக்கினால் 63 வரும். எங்கள் பைகளில் எத்தனை மாம்பழங்கள் இருக்கின்றன எனச் சொல்ல முடியுமா?

[குறிப்பு எங்கள் இருவர் பைகளிலும் 10க்கும் குறைவான பழங்களே உள்ளன].

**எங்கள் பைகளில் எத்தனை மாம்பழங்கள் உள்ளன சொல்லு பார்க்கலாம்?"**


## 2.எத்தனை உருவங்கள்?

**இந்த இரயில் இன்ஜின் உருவாக எத்தனை வட்டங்கள், முக்கோணங்கள், செவ்வகங்கள், சதுரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன? கண்டுபிடியுங்கள்.**



| a) | b) | c) | d) |
|---|---|---|---|
| ▮ = 2 | ▮ = 2 | ▮ = 2 | ▮ = 2 |
| ■ = 6 | ■ = 7 | ■ = 7 | ■ = 6 |
| ▲ = 1 | ▲ = 1 | ▲ = 1 | ▲ = 1 |
| ● = 6 | ● = 3 | ● = 6 | ● = 3 |

## 3. பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடி




விடைகள் : 22ஆம் பக்கம்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாண
# கலைவ




**மு. மகேஷ்,**
6ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
காட்டுக்கரணை,
செங்கல்பட்டு.





**எஸ். ஜெயசூரியா,** 9ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
ஒத்தக்கல்மண்டபம், கோயம்புத்தூர்.





**சுதர்சன்,** 7ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
மேல்பட்டாம்பாக்கம், கடலூர்.




**கு. இளஞ்செழியன்,** 8ஆம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ச.கணபதிபாளையம், ஈரோடு.




**சுபிக்ஷா,** 9ஆம் வகுப்பு,
அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
ஆயக்காரன்புலம்-3, வேதாரண்யம், நாகப்பட்டினம்.




**எக்ஸ். அனிஷ்,** 8ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, நாட்டாலம்,
கன்னியாகுமரி.





**சி. ஸ்ரீதரன்,** 9ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, திருமலைப்பட்டி,
நாமக்கல்.




**என். நெகிலன்,** 6ஆம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
சேரன்குளம், திருவாரூர்.




**க. நிஷாந்த்,** 9ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, கோட்டத்தூர்,
துறையூர் தாலூக்கா, திருச்சி.





**எம். சுபிக்ஷா,** 8ஆம் வகுப்பு,
அமராவதி முருகையன் நகராட்சிப் பெண்கள்
உயர்நிலைப் பள்ளி, திருவண்ணாமலை.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.TrbTnpsc.com




# ...வர் ...ண்ணம்





எப். நூருல் ஆ:ப்ரா, 8ஆம் வகுப்பு, கே.இராமைய்யா செட்டி ஏ.ஆர்.சி. மகளிர் மேல்நிலைப் பள்ளி, முத்தியால்பேட்டை, சென்னை.





சி.தேஷிகா, 6ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கிழக்கு தவிட்டுப்பாளையம், கரூர்.





ரா. கவிதா. 6ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நொகனூர், கிருஷ்ணகிரி.





பா. மணி, 7ஆம் வகுப்பு, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கார்சேரி, மதுரை.





கே. லாவண்யா, 8ஆம் வகுப்பு, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குருவராஜப்பேட்டை, இராணிப்பேட்டை.




சே. மனிஷா, 8ஆம் வகுப்பு, அரசு நடுநிலைப் பள்ளி, வெங்காடம்பட்டி, தென்காசி.




அ. ஷமீகா, 7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அங்காடித் தெரு, உத்தமபாளையம், தேனி.




மு. நிவித்தா, 7ஆம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கொல்லிமலை, நீலகிரி




வி. மணிகண்டன், 9ஆம் வகுப்பு, அண்ணாமலை நாடார் உண்ணாமலை அம்மாள் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, சிவகாசி, விருதுநகர்.

**படைப்புகளை அனுப்பும் மாணவர்கள் தங்களின் பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், பள்ளி முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மாவட்டம், தொலைபேசி எண் போன்ற விவரங்களையும் மறக்காமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.**


முகவரி : 'மாணவர் கலைவண்ணம்',
**'தேன்சிட்டு' சிறார் இதழ்**
8வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரிச்சாலை, சென்னை – 600 006.
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# தனித்துவம் மிக்க படைப்பாளி!


ம.இலெ. தங்கப்பா.

**சிறுவர் இலக்கியத்தில் தனக்கென தனி இடம் பிடித்தவர் பாவலர் ம.இலெ. தங்கப்பா. இவர், 1934ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குறும்பலாப்பேரி எனும் சிற்றூரில் பிறந்தவர். இவர் சிறப்பான தமிழ் அறிஞர். அதே நேரத்தில் ஆங்கிலப் பேராசிரியராகவும் பணிபுரிந்தவர்.**

தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளிலும் எழுதும் ஆற்றல் பெற்றவர். கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு பிரிவுகளில் 26 நூல்களை எழுதியவர். இவர் தனித்தமிழிலேயே பேசினார், எழுதினார். தனித்தமிழைப் பரப்பினார். அதற்காகத் 'தெளி' என்ற இதழையும் நடத்தினார்.



இவருடைய நூல்கள் தமிழ் நலம், தமிழர் நலம், வாழ்வு நலம், இயற்கை நலம் குறித்த விழிப்புணர்வு கருத்துகளைத் தந்தன. நம் மண்ணின் வாழ்க்கையைப் பாடல்களாக்கி குழந்தைகளுக்குத் தந்தார். அவற்றில் இயற்கையின் மணம் கமழ்ந்தது.


பாவலர் ம.இலெ. தங்கப்பா இரண்டு சாகித்ய அகாதெமி விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர். 'சோளக்கொல்லை பொம்மை' என்கிற குழந்தைப் பாடல்கள் நூலுக்காக 2012ஆம் ஆண்டில் 'பால சாகித்ய புரஸ்கார்' விருது பெற்றார். அதே ஆண்டில் சாகித்ய அகாதெமியின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதையும் பெற்றார். முத்தொள்ளாயிரம், திருவருட்பா, பாரதிதாசன் கவிதைகள் ஆகிய நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களை ஆங்கிலத்தில் தந்தார். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தார்.

குழந்தைகள் உள்ளம் மலர்ச்சி பெற துள்ளும் ஓசை நயத்துடன் அன்பு ததும்பும் குழந்தைப் பாடல்களைத் தந்த பெருமைக்கு உரியவர் நம் பாவலர் ம.இலெ. தங்கப்பா ஆவார்.

– சுகுமாரன்

# லியோ டால்ஸ்டாய்


**ரஷ்ய இலக்கியத்தில் அதிஅற்புதமான படைப்புகளைத் தந்த மகத்தான எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய். இவர், 1828 ஆம் ஆண்டு பிறந்தவர். நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் எழுதியவர். இவர் எழுதிய 'அன்னா கரீனனா' (Anna Karenina) எனும் நாவல் உலகம் முழுவதும் புகழ்பெற்றது.**




அதேபோல, இவர் எழுதிய மாபெரும் காவியம் 'போரும் அமைதியும்' (War and peace). இந்த இரண்டு நூல்களும் உலகம் முழுவதும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு கோடிக்கணக்கான வாசகர்களால் விரும்பி வாசிக்கப்படுகின்றன. இவை உலகின் மகத்தான நூல்களின் வரிசையில் இடம்பெற்றுள்ளன என்பதும் சிறப்புக்கு உரியது. இவரின் நூல்கள் பலவும் தமிழில் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

போரும் அமைதியும் எழுதிய டால்ஸ்டாய், என்றுமே வன்முறையை விரும்பியவர் இல்லை. எப்போதும் எங்கும் அமைதியே நிலவ வேண்டும் என்று கருதியவர். காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது இவரின் எழுத்துகளை விரும்பிப் படித்தார். குறிப்பாக, 'கடவுளின் அரசாங்கம் உனக்குள் இருக்கிறது'. (The Kingdom of God is Within You) எனும் நூல் காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்த நூல். பின்னாளில் 'டால்ஸ்டாய் பண்ணை' எனும் அமைப்பை உருவாக்கவும் செய்தார் காந்தியடிகள்.

டால்ஸ்டாய் பெரியவர்களுக்காக மட்டுமல்ல, சிறுவர்களுக்காகவும் கதைகள் எழுதியிருக்கிறார். அக்கதைகள் உலகம் முழுவதும் உள்ள சிறுவர்களால் விரும்பி வாசிக்கப்படுகின்றன.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# தருமபுரி மாவட்டம்


பறவைக்கல் அல்லது விசிறிக்கல்

தருமபுரி பகுதியின் பண்பாட்டுத் தொன்மையை அளவிட வேண்டுமெனில் அங்கு நிறைந்துள்ள வரலாற்றுக்கு முந்தைய நினைவுச் சின்னங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். இப்பகுதியில் கிடைத்துள்ள புதிய கற்கால, பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் வழியே இப்பகுதியில் மனிதர்கள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வந்துள்ளதை நாம் அறிய முடிகிறது.

மோதூர் கிராமத்தில் கல்வட்டம் ஒன்றின் நடுவே அமைக்கப்பட்டுள்ள பறவை வடிவிலான சிற்பம் பெருங்கற்கால வாழ்வியலின் எச்சம் எனத் தொல்லியல் அறிஞர்கள் உறுதி செய்துள்ளனர். பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான இச்சின்னத்தை அங்கு வாழும் மக்கள் பறவைக்கல் அல்லது விசிறிக்கல் என அழைக்கின்றனர்.

சங்க காலத்தில் தருமபுரி நகரம் தகடூர் என அழைக்கப்பட்டது. அக்காலத்தில் அதியமான் நெடுமான் அஞ்சியின் ஆளுகையின் கீழ் இருந்த இந்நிலப்பரப்பு குறித்தும், அவனது ஆட்சித்திறன் குறித்தும் ஔவையாரின் பாடல்கள் வழியே நாம் ஒரு சித்திரத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.


எட்டாம் நூற்றாண்டில் பல்லவர்கள், ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர்கள், பத்தாம் நூற்றாண்டில் ராஷ்டிரகூடர்கள், பதினொன்றாம் நூற்றாண்டில் மீண்டும் சோழர்கள், பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஹோய்சாளர்கள், பதினான்காம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசர்கள், அவர்களைத் தொடர்ந்து மதுரை நாயக்கர்கள், பதினேழாம் நூற்றாண்டில் மைசூர் அரசர்கள் ஆட்சியின் கீழ் இருந்தது இப்பகுதி. பிறகு பதினெட்டாம் நூற்றாண்டில் ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆளுகையின் கீழ் வந்தது. மைசூர் போரின்போது திப்பு உயிரிழக்க, தங்கள் வசம் வந்த தருமபுரியை ஆங்கிலேயர் சேலம் மாவட்டத்துடன் இணைத்து மேலாண்மை செய்யத் தொடங்கினர்.

சுதந்திரமடைந்தபோது சேலம் மாவட்டத்தின் ஒரு தாலுகாவாக தருமபுரி இருந்தது. பிறகு, 1965ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாளன்று தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் பிறந்தது.

- கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, சேலம், கர்நாடக மாநிலத்தின் சாம்ராஜ நகர் மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்டுள்ள தருமபுரி மாவட்டத்தின் பெரும்பகுதி மலைகள், காடுகள், சமவெளிகளால் ஆனது.

- இம்மாவட்டத்தின் பெரும்பாலான மக்கள், கிராமங்களில் வசிக்கிறார்கள். தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மாம்பழ உற்பத்தியில் 60 சதவிகிதம் அளவிற்குத் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் பங்களிப்பு உள்ளன. இது வறண்ட பகுதி என்பதால் இங்கு நெல்லைவிட அதிக அளவில் சிறுதானியங்கள்தான் பயிரிடப்படுகின்றன.

- பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அதியமான் கோட்டை சென்னராயப் பெருமாள் கோயில், தீர்த்தமலை தீர்த்தகிரீஸ்வரர் கோயில், பாப்பாரப்பட்டியில் அமைந்துள்ள விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவா நினைவிடம், மதராஸ் மாகாண ஆளுநராக இருந்த சர் தாமஸ் மன்றோ இங்கு வாழ்ந்ததைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூண் (Sir Thomas Munro Pillar), ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி ஆகியவை இம்மாவட்டத்தின் குறிப்பிடத் தகுந்த சுற்றுலாத் தளங்களாகத் திகழ்கின்றன.




- மகாத்மா காந்தி, ஜெயப்ரகாஷ் நாராயணன் ஆகியோரின் சீடரும், பாண்டிச்சேரி விடுதலைக்காகப் போராடியவருமான ஜி. ஏ. வடிவேலு, விடுதலைப் போராட்ட வீரர் டி.என். தீர்த்தகிரி, தமிழறிஞர் பாவலர் மணிவேலனார், தமிழ்நாட்டின் முதல் பெண் இந்திய காவல் பணி (IPS) அதிகாரியும் எழுத்தாளருமான ஜி.திலகவதி, எழுத்தாளர்கள் ஆதவன் தீட்சண்யா, மா.இராமமூர்த்தி, பரத நாட்டியக் கலைஞர் ஜாகீர் உசேன் ஆகியோர் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# வடதுருவமும் தென்துருவமும்

உலகை வரைபடத்தைப் பார்த்துள்ளீர்கள்தானே? அதன் மேல் பகுதியிலும் கீழ் பகுதியிலும் என இரு துருவப்பகுதிகள் உள்ளன. வட துருவப்பகுதி ஆர்க்டிக் பெருங்கடலால் சூழப்பட்டுள்ளது. தென் துருவம் அண்டார்டிகாவில் அமைந்துள்ளது. தென் துருவத்தில் நிலம் உள்ளது. வட துருவப் பகுதிகளில் நிலம் எதுவும் இல்லை. முழுவதும் பனியால் மட்டுமே சூழப்பட்டுள்ளது. வட துருவத்திற்கு அருகில் கனடா மற்றும் கிரீன்லாந்து போன்ற நாடுகள் உள்ளன. இந்த இரண்டு துருவங்களிலும் மழைப்பொழிவு இல்லாத காரணத்தால் இவை பனிப் பாலைவனங்களாகவும் கருதப்படுகின்றன.

**வெப்பநிலை :** ஆர்க்டிக்கில் சராசரி குளிர்கால வெப்பநிலை சுமார் மைனஸ் 22 டிகிரி வரை இருக்கும். தென் துருவத்தில் அதிகபட்சமாக மைனஸ் 129 டிகிரி வரை இருக்கும்.

**தாவரங்கள் :** ஆர்க்டிக்கின் பெரும்பாலான பகுதிகளில் மரங்கள் வளர இயலாத வறண்ட நிலை உள்ளது. ஆர்க்டிக்கில் பெர்மோஃப்ரோஸ்ட் என்ற பனிக்கட்டி அடுக்கு உள்ளது. இதன் காரணமாகக் கீழே வேர்கள் செல்ல முடியாது. சில இடங்களில் இந்த பெர்மோஃப்ரோஸ்ட் சிறிதளவு கரைவதால், புல், பாசிகள் வளர்கின்றன. இது போலவே அண்டார்டிகாவிலும் சிறிய புதர்கள், பாசிகள் வளரும்.




**உறையும் பனியில் வாழும் உயிரினங்கள்:** முழுவதும் பனியால் சூழப்பட்ட துருவங்களிலும் விலங்குகள் வாழ்கின்றன. ஆர்க்டிக் பகுதியில் துருவக் கரடிகள், நரிகள் வாழ்கின்றன. மேலும் ஆர்க்டிக் கடல் பகுதியில் வால்ரஸ் எனப்படும் யானைகள், கூம்பு முதுகுடைய திமிங்கிலங்கள் காணப்படுகின்றன. அண்டார்டிகா கடலில் இந்த இரு உயிரினங்களுடன் சேர்த்து பென்குயின்களும் காணப்படுகின்றன.

**ஆர்க்டிக் நரி :** இவை மைனஸ் 50 டிகிரி செல்சியஸ் வரையிலான குளிரைத் தாங்கக்கூடியதாகும்.

**பென்குயின்:** சுமார் ஒரு மீட்டர் நீளமும், 35 கிலோ எடையுடையதாகவும் உள்ளன.

**துருவக் கரடி :** சுமார் 2.7 மீட்டர் நீளமும் 720 கிலோ எடையும் உடையதாக உள்ளது.

**கடல் யானைகள் :** கடல் யானைகள் சுமார் 900 கிலோ எடையுடைதாக இருக்கும்.



– சுகுணா

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com





# காந்தி நினைவு அருங்காட்சியகம்

**இந்திய விடுதலை என்றதுமே சட்டென்று நம் மனதில் வரும் பெயர்களில் முதன்மையானது காந்தியடிகள்.**

காந்தியின் நினைவாகவும், அவரின் செய்திகளை மக்களிடையே பரப்பிடும் நோக்கத்துடனும் 'அகில இந்திய காந்தி நினைவு நிதி' நிறுவனத்தின் முயற்சியால் நம் நாட்டில் ஏழு இடங்களில் காந்தி நினைவு அருங்காட்சியகங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் தென்னிந்தியாவில் உள்ள ஒரே அருங்காட்சியகம் நமது தமிழ்நாட்டின் மதுரையில் அமைந்துள்ளது.

இந்த அருங்காட்சியகத்தை 1959ஆம் ஆண்டு, ஏப்ரல் 15ஆம் நாளன்று திறந்து வைத்தவர் இந்தியாவின் முதல் பிரதமர் நேரு ஆவார்.

13 ஏக்கர் பரப்பளவு உள்ள இந்த அருங்காட்சியகத்தில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் அடங்கிய நூலகம் அமைந்துள்ளது. இங்கு காந்தியடிகளின் சுமார் 28,225 கடிதங்களின் புகைப்பட நகல்கள் மற்றும் காந்தியடிகள் பற்றிய 22 மைக்ரோ பிலிம் சுருள்களும் இடம்பெற்றுள்ளன என்பது சிறப்பாகும்.

8,000 மக்கள் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் வகையில் திறந்தவெளிக் கலையரங்கம் அமைந்துள்ளது. மேலும் காந்தியக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புகளை நடத்தி வருகிறது.



காந்தி பயன்படுத்திய பொருட்களைப் பார்க்க ஆவல் வருகிறதா? மதுரை காந்தி அருங்காட்சியகத்திற்குச் செல்லத் திட்டமிடுங்கள்.

– இராம லட்சுமி

**தமிழ்நாட்டில் காந்தி** : காந்தியடிகள் 1896 முதல் 1946ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டிற்கு 20 முறை வருகை புரிந்துள்ளார். அதில் ஐந்து முறை மதுரைக்கு வந்துள்ளார். இதைச் சிறப்பிக்கும் வகையில் சிறப்புக் கண்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகள் சேவாக்கிரம ஆசிரமத்தில் வாழ்ந்த குடிலின் மாதிரி பாபு குடில் அமைக்கப்பட்டுள்ளது.

காந்தி நினைவு அருங்காட்சியகத்தின் முன் பகுதியில் காந்தி அஸ்தி பீடம் அமைந்துள்ளது.

சர்வ சமய வழிபாட்டுக் கூடமாக வினோபா ஜோதி அரங்கம் அமைந்துள்ளது.

காந்தி அமைதி தத்துவ ஆய்வுகளும், நூல்கள் வெளியீடு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவும் செயல்பட்டு வருகின்றன.

## அருங்காட்சியகத்தில் உள்ளவை

**அருங்காட்சியகக் கூடம்:** : தமுக்கம் அரண்மனைக் கட்டடத்தின் மையத்தில் இது உள்ளது. இதில் 30 அட்டவணைகளில் 265 புகைப்படங்களுடன் வரலாற்று விவரங்கள் அடங்கிய 'இந்தியச் சுதந்திரப் போராட்டம்' எனும் சிறப்புக் கண்காட்சி உள்ளது. பல மாநிலங்கள் அளித்த சிறப்புப் பொருட்கள், காந்தியடிகள் பயன்படுத்திய பொருட்கள் (உண்மை -14, மாதிரிப் பொருட்கள்- 32), அவரின் கடிதங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# தண்ணீரின் ஓசை

கதை: ஷாலினி ஸ்ரீனிவாசன்
ஓவியங்கள்: தபீஸ்மிதா டேஸ்குப்தா
தமிழில்: ரம்யா சதீஷ்






Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com






Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# கராத்தே

**உடலையும் மனதையும் கட்டுப்பாட்டோடு வைத்துக்கொள்ள உதவும் தற்காப்புக் கலையே கராத்தே. இதன் பிறப்பிடம் ஜப்பான்.**

யுக்கியு ஆட்சிக் (Ryukyu Dynasty) காலத்தில் ஜப்பானின் ஒகினாவா தீவில் கராத்தே கலை பிறந்ததாகக் கூறப்படுகிறது. 1920ஆம் ஆண்டுவாக்கில் ஜப்பானின் மிகப் பிரபலமான கலையாக உருவெடுத்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகளவில் பிரபலமடைந்தது.

கராத்தே கற்றுக் கொள்பவர்கள் கராத்தேகா (karateka) என அழைக்கப் படுகின்றனர்.

**கராத்தே முறைகளும் விதிகளும் :** கராத்தேவில் இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று குமிட்டே (Kumite), மற்றொன்று கட்டா (Kata).

**குமிட்டே முறை:** மூன்று நிமிடச் சண்டை ஆட்டம். இதில் அதிகப் புள்ளிகள் பெறுபவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார்.

ஒரு புள்ளி (Yuko) - மூடிய கையினால் எதிர் போட்டியாளரின் தலை, கழுத்து, வயிறு போன்ற பகுதிகளில் ஒரு குத்து விடவேண்டும்.

இரண்டு புள்ளிகள் (Waza-ari) - உடலில் ஒரு மிதி (Kick) கொடுக்க வேண்டும்.


மூன்று புள்ளிகள் (Ippon) - தலை மீது மிதித்தல், எதிர் போட்டியாளரைக் கீழே தள்ளி ஒரு குத்து விடுதல். இவை இரண்டுக்கும் 3 புள்ளிகள் வழங்கப்படும்.

**கட்டா முறை:** முன் வரையறுக்கப்பட்ட கராத்தே நகர்வுகளைச் செய்து காட்டுவது. மின்னணு வாக்கு முறைப்படி நீதிபதிகள் வாக்களித்து வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவர்.



**ஒலிம்பிக்கில் கராத்தே**

2020ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் கராத்தே போட்டி அறிமுகமானது. தற்காப்புக் கலையின் நாடித் துடிப்பாகக் கருதப்படும் நிப்பான் புடோகன் அரங்கத்தில்தான் போட்டிகள் நடத்தப்பட்டன.






தமிழ்நாட்டைச் சேர்ந்த சபரி கார்த்திக் மிகப் பிரபலமான கராத்தே வீரர். சர்வதேச ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்று பெருமை சேர்த்துள்ளார்.

அதேபோல் ஜகார்த்தாவில் நடைபெற்ற கராத்தே தொடரில் தங்கம் வென்ற பிரனாயி ஷர்மாவும் முக்கியமான வீரராகத் திகழ்கிறார்.

பெண்கள் பிரிவில் சுப்ரியா ஜாதவ் அமெரிக்காவில் நடைபெற்ற கராத்தே போட்டியில் தங்கம் வென்றார். இவரும் இந்தியாவின் மிக முக்கியமான கராத்தே வீராங்கனை ஆவார்.




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# ஒரு பாட்டுக்கு ஓர் அணா!

அந்தச் சிறுவனின் பெயர் ரங்கநாதன். அவனது ஊர் சிதம்பரம். வறுமையான வீட்டில் பிறந்த அவன், காலையிலும் மாலையிலும் பல வீடுகளுக்குப் பால் கொண்டு தருவதை வேலையாகச் செய்தான். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பல தமிழ் அறிஞர்களின் வீடுகளுக்கும் அவன் பால் அளித்து வந்தான். அப்போது அவர்கள் இவன் மீது தனி அன்பு கொண்டு கவனிப்பார்கள். ஒரு பாடல் ஒப்புவித்தால் ஓர் அணா காசு தருவார் ரா.பி.சேதுபிள்ளை எனும் தமிழறிஞர். அதற்காகவே ரங்கநாதன் பல பாடல்களை மனப்பாடம் செய்தான். அவன் ஐந்தாம் வகுப்புப் படிக்கையில் சாரணர் இயக்கத்தில் சேர ஆசைப்பட்டான். ஆனால், சாரணர் சீருடை வாங்கித் தரும் நிலையில் அவனது குடும்பம் இல்லை. அதைத் தெரிந்துகொண்டு சீருடை வாங்கித் தந்ததும் அதே தமிழறிஞர் தான்.



விபுலானந்த அடிகளாருக்கு இந்தச் சிறுவன் மீது தனிக் கவனம் உண்டு. அருகே உள்ள ஊர்களில் அமைந்துள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொண்டு செய்யச் செல்லும்போது மறக்காமல் இவனையும் அழைத்துச் செல்வார். இவனும் அந்தத் தொண்டில் ஆர்வத்தோடு கலந்துகொள்வான். அங்கு நடப்பவற்றைப் பார்த்து, சிறு வயதிலேயே தீண்டாமை மீது வெறுப்புணர்வு ரங்கநாதனுக்கு ஏற்பட்டுவிட்டது. சாதி வேற்றுமைகளை எதிர்க்கும் குணமும் அப்போதே அவனுக்குள் வந்துவிட்டது. விபுலானந்த அடிகள் இலங்கைக்குச் செல்ல வேண்டியிருந்தபோது, தானும் செல்வேன் என்று அடம்பிடித்தான். இவனைத் தூங்க வைத்த பிறகே அவர் புறப்பட வேண்டியதாயிற்று.

ஓவியம் : பா. செந்தில்குமார்

சிறுவயது முதலே தமிழ் மீதும் சமூகத்தின் மீதும் அளவற்ற பற்றுகொண்ட சிறுவன்தான் பின்னாளில் குன்றக்குடி அடிகளார் என்று அழைக்கப்பட்டார். தமிழறிஞர், சிறந்த பேச்சாளர். பல நாடுகளுக்குச் சென்று ஆன்மிகக் கருத்துகளைப் பரப்பியவர். சமூகத்தில் கலவரம் ஏற்பட்டபோது அதைத் தடுக்கவும் அமைதி ஏற்படுத்தவும் அர்ப்பணிப்பு உணர்வோடு சென்றவர்.



குன்றக்குடி அடிகளார்




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# சுகம் தரும் தூதுவளை!

உணவே மருந்து என்று நம் முன்னோர்கள் சொல்வார்கள் இல்லையா? நம் உணவில் சேர்த்துக்கொள்ளும் பல பொருட்கள் மருத்துவக் குணம் மிக்கவை. அவற்றில் ஒன்றுதான் தூதுவளை. பெயரே அழகாக இருக்கிறது அல்லவா?



- ➔ தூதுவளை மூலிகையாகப் பயன்படும் கொடி வகை ஆகும். இது, சிங்கவல்லி, அளர்க்கம், அளருகம், தூதுணை, தூதுவளம், தூதுவேளை ஆகிய பெயர்களிலும் குறிப்பிடப்படுகின்றது.
- ➔ தனது மெல்லிய தண்டு, இலைகளில் சிறு சிறு முள்களைப் பெற்றிருந்தாலும், இதன் மருத்துவக் குணம் நம்மை வியக்க வைக்கும். சுரம், இருமல், சளி போன்ற கப நோய்களைக் குணப்படுத்துவதில் தூதுவளை முக்கிய இடம் வகிக்கிறது.
- ➔ தூதுவளையின் இலைகளைக் கொண்டு சட்னி, துவையல், ரசம், அடை எனப் பலவித உணவு வகைகளைச் செய்யலாம்.
- ➔ நெய்யைக் காய்ச்சும்போது தூதுவளையையும் சேர்த்துக் காய்ச்சினால், நெய்யின் மருத்துவக் குணங்கள் பல மடங்கு அதிகரிக்கும்.
- ➔ புற்றுநோய், கல்லீரல் தொடர்பான நோய்களுக்குத் தூதுவளையின் பயன்கள் குறித்த ஆராய்ச்சி பெருமளவில் நடைபெற்று வருகிறது.
- ➔ காச நோய் உள்ளவர்கள் தங்கள் மருந்துகளோடு தூதுவளையையும் சேர்த்துக் கொண்டால் நோயின் தீவிரம் சீக்கிரம் குறையும் என்று கூறப்படுகிறது.
- ➔ சித்த மருத்துவத்தில் காது தொடர்பான பிரச்சினைகளுக்குக் கூறப்படும் மூலிகைகளில் தூதுவளையும் ஒன்று.
- ➔ குளிர் காலத்தில் குடிக்கும் தண்ணீரில் தூதுவளை இலைகளைப் போட்டுக் காய்ச்சிப் பயன்படுத்தலாம்.
- ➔ ஆஸ்துமாவின் தீவிரத்தைக் குறைப்பதில் தூதுவளை முக்கியப் பங்காற்றுகிறது.
- ➔ தூதுவளைச் சாற்றோடு சிறிது மிளகுத்தூள் சேர்த்துக் குடித்தால், சளி, இருமல் மட்டுமன்றி செரிமானப் பிரச்சினைகளும் சரியாகும்.

**பல்வேறு பலன்களை அள்ளித் தரும் தூதுவளையை நம் உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்வோம்.**

### 6ஆம் பக்க விடைகள்

வார்த்தை விளையாட்டு


1. புத்தகம்
2. விமானப்படை
3. வானவில்
4. போக்குவரத்து
5. செம்பருத்தி
6. சிலம்பாட்டம்
7. விண்கற்கள்
8. கடிகாரம்

### 11ஆம் பக்க விடைகள்

1. புதிர்

விடை : 7, 9

2. எத்தனை உருவங்கள்?



c) ▮ = 2
■ = 7
▲ = 1
● = 6


3. பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடி



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com









Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



Then Chittu Fortnightly Registered with RNI No TNTAM/2022/82345
Postal Registration No TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No TN/PMG(CCR)WPP-678/22-24
Published on 01st & 16th of every month
Posted between 16-20 January 2024 Posted at Egmore, RMS/ Patrika Channel
இதழ் 28



17

**முகம்மது அலி**

அமெரிக்காவைச் சேர்ந்த குத்துச்சண்டை வீரர். போட்டியிட்ட 61 போட்டிகளில் 56 முறை வெற்றி பெற்றுள்ளார். 1960ஆம் ஆண்டு ரோம் நகரில் நடந்த ஒலிம்பிக்கில் குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்றுள்ளார். அமெரிக்காவில் நடந்த பல ஒடுக்குமுறை சம்பவங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்ததோடு அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக ஒலிம்பிக்கில் பெற்ற தங்கப்பதக்கத்தை ஒகியோ நதியில் வீசினார்.



17

**எம்.ஜி.இராமச்சந்திரன்**

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர். 1917ஆம் ஆண்டு பிறந்த இவர், இளம் வயதிலேயே நாடகக் குழுவில் நடிக்கத் தொடங்கி பின் தமிழ்த் திரைப் படங்களில் முன்னணி நடிகராக வளர்ந்து உச்சம் தொட்டவர். பின் அரசியலில் ஈடுபட்டு முதலமைச்சராகி, நல்ல திட்டங்கள் பலவற்றைக் கொண்டு வந்தார். இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா இவருக்கு வழங்கப்பட்டது.

## ஜனவரி 2024

### பிறந்த நாட்கள்



23

**சுபாஷ் சந்திரபோஸ்**

இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரரான இவர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் என அழைக்கப்படுகிறார். இரண்டாம் உலகப் போரில் வெளிநாடுகளில் கைதிகளாய் இருந்த இந்தியர்களைத் திரட்டி இராணுவப் படையை உருவாக்கினார். ஆங்கிலேயருக்கு எதிராக இப்படையோடு தாக்குதல் நடத்தினார். 1939ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரின் மரணம் இன்றுவரை மர்மமாக இருந்து வருகிறது.



21

**வைக்கம் முகமது பஷீர் :** கேரளாவைச் சேர்ந்த சிறந்த எழுத்தாளர். 1908ஆம் ஆண்டு பிறந்தவர். சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். இவர் எழுதிய 'பாத்துமாவின் ஆடு', 'பால்யகால சகி' உள்ளிட்ட பல நூல்கள் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. உயரிய இலக்கிய விருதான சாகித்ய அகாதெமி விருதைப் பெற்றவர்.




28

**லாலா லஜபதி ராய் :** இந்திய விடுதலை இயக்கத்தின் முன்னோடியாகக் கருதப்படும் முக்கியத் தலைவர்களில் ஒருவரான லாலா லஜபதி ராய், பஞ்சாப் மாகாணத்தில் பிறந்தவர். இவரின் பல வீரச் செயல்களுக்காக 'பஞ்சாப் சிங்கம்' என மக்களால் அழைக்கப்பட்டார். பஞ்சாப் தேசிய வங்கியை நிறுவியவரும் இவரே.




### முக்கிய தினங்கள்




**தேசிய பெண் குழந்தைகள் தினம்** ஜனவரி 24

இந்தியாவில் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஜனவரி 24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பெண் குழந்தைகளுக்கான உரிமைகள், பெண் கல்வி, பெண்களின் உடல் நலம், ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் முதன்மை நோக்கம்.

**தேசிய வாக்காளர்கள் தினம்** ஜனவரி 25

இந்தியத் தேர்தல் ஆணையம் 1950ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இந்நாளைக் கொண்டாடும் விதமாக, 2011ஆம் ஆண்டு முதல் ஜனவரி 25 ஆம் நாளை தேசிய வாக்காளர்கள் தினமாகக் கொண்டாடி வருகிறோம். 18 வயது நிரம்பிய ஒவ்வொரு இந்தியரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வுக்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.




**குடியரசு தினம்** ஜனவரி 26

இந்தியாவில் 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று அரசியலமைப்பு அதிகாரபூர்வமாக அமல்படுத்தப்பட்டது. இந்த நாளே இந்தியாவின் குடியரசு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள குடிமக்கள் அனைவரும் ஒவ்வொரு ஆண்டும் இந்நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுவர். டெல்லியில் குடியரசுத் தலைவர் முன்னிலையில் இராணுவ அணிவகுப்பு நடைபெறும்.




வங்களுக்கு தேன்சிட்டு இதழ் பிடித்திருக்கிறதா? நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்
முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு, 8ஆவது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 6
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com